# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2017

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 10

சுட்டெண்:

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. இலக்கிய இலக்கண சான்றுகளுடன் தமிழ்மொழியின் தனித்தன்மையை உலகுக்கு உணர்த்தியவர்

அ) கண்ணதாசன் ஆ) உருத்திரமூர்த்தி

இ) தேவநேயப்பாவாணர் ஈ) பாவேந்தர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. நிலமும் பொழுதும்

அ) முதற்பொருள் ஆ) உரிப்பொருள்

இ) கருப்பொருள் ஈ) புறப்பொருள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. குமரிக்கண்டத்தில் ஓடிய ஆறுகளில் ஒன்று

அ) பஃறுளி ஆ) கங்கை இ) கோதாவரி ஈ) காவேரி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. பின்வருவனவற்றுள் மென்றொடர்க் குற்றியலுகரம்

அ) தட்டு ஆ) மூழ்கு இ) வண்டு ஈ) காசு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. விடாமுயற்சி என்ற கருத்தை விளக்கும் பழமொழி

அ) அடிமேல் அடிஅடித்தால் அம்மியும் நகரும்.

ஆ) ஆனைக்கும் அடி சறுக்கும்.

இ) நிறைகுடம் தளம்பாது.

ஈ) ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. **படிமம்** என்பது

அ) அம்பு ஆ) தெய்வச்சிலை இ) நறுமணம் ஈ) ஆரவாரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. அவுத்திரேலியா, ஆபிரிக்கா என்ற பெருநிலப்பரப்புகள் தனித்தனியாகப் பிரிந்து போனதற்கான கரணியம்

அ) நோய் ஆ) போர் இ) அரசியல் ஈ) கடற்கோள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. கல் + தூண் என்பதைச் சேர்த்தால்

அ) கற்றூண் ஆ) கல்தூண் இ) கல்த்தூண் ஈ) கற்தூண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. **ஏவுகணை** என்பது

அ) உம்மைத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) வினைத்தொகை ஈ) பண்புத்தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. **குறள் :-** ***சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு***

***______________ வேண்டு பவர்***

அ) போராண்மை ஆ) வேளாண்மை

இ) பேராண்மை ஈ) சீராண்மை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. வயலும் வயல் சார்ந்த இடமும்

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. குமரிக்கண்டத்தின் மேற்கோடியில் இருந்த பன்மலை அடுக்குத் தொடர்

அ) இமயமலை ஆ) பொதியமலை இ) குமரிமலை ஈ) விந்திய மலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. மொழிக்கு இறுதியில் வராத எழுத்து

அ) ம் ஆ) ண் இ) ட் ஈ) ய்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. 'எட்டுத் தொகை, பத்துப்பாட்டு நூல்கள் ________ நூல்களாகும்.

அ) முதற்கழக ஆ) இடைக்கழக இ) கடைக்கழக ஈ) தலைக்கழக

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. அரசியற் புலப்பெயர்வு இடம்பெறத் தொடங்கியது

அ) 10 ஆம் நூற்றாண்டு ஆ) 20 ஆம் நூற்றாண்டு

இ) 19 ஆம் நூற்றாண்டு ஈ) 17 ஆம் நூற்றாண்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. பின்வருவனவற்றில் காரண இடுகுறிப் பெயர்

அ) வானொலி ஆ) பறவை இ) மரம் ஈ) மண்வெட்டி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. சோலையில் செவ்வழிப் பண்ணை இசைத்தவை

அ) குயில்கள் ஆ) தும்பிகள் இ) அன்னங்கள் ஈ) மயில்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. செந்தாமரையும் வெண்டாமரையும் தண்மையில் மதர்த்து மலர்ந்து இருக்கின்றன. இதில் **தண்மை** என்பது

அ) நீரலை ஆ) சூடு இ) அழகு ஈ) குளிர்மை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. சேரர், சோழர், பாண்டியர் போன்ற பெயர்களால் அழைக்கப்படும் பழங்குடியினர் வாழும் நாடு

அ) பர்மா ஆ) சுமத்திரா இ) தாய்லாந்து ஈ) கம்போடியா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. குணப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) ஈழம் ஆ) அன்பு இ) நாளை ஈ) பாடுதல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. **"மங்கிக் கிடக்கும் தமிழை - மீண்டும்**
**மாளிகை ஏற்றி வணங்கியே சாவேன்! "** என்று பாடியவர்

அ) பாவேந்தர் ஆ) காசிஆனந்தன்

இ) பாரதியார் ஈ) உருத்திரமூர்த்தி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. சேரன் செங்குட்டுவன் இளவேனிற் காலத்தில் ______________ காணப் புறப்பட்டான்

அ) காட்டுவளம் ஆ) நாட்டுவளம் இ) மலைவளம் ஈ) நிலவளம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. மட்டக்களப்பு மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட சிங்களக் குடியேற்றம்

அ) பதவியாத் திட்டம் ஆ) கல்லோயாத் திட்டம்

இ) மணலாற்றுத்திட்டம் ஈ) கந்தளாய்த்திட்டம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. உயிர்முன் உயிர்புணர்தலுக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) கையேடு ஆ) பற்பொடி இ) சொல்லணி ஈ) நெல்வயல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. புலிக்கொடி ______________________ கொடி.

அ) சேரரது ஆ) சோழரது இ) பாண்டியரது ஈ) பல்லவரது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. **நாளை வந்தேன்.** என்பது

அ) விடை வழு ஆ) கால வழு இ) பால் வழு ஈ) திணை வழு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. கைபர் கணவாயூடாக நாவலந் தீவினுள் நுழைந்தவர்கள்

அ) பறங்கியர் ஆ) ஆரியர் இ) ஐரோப்பியர் ஈ) ஆங்கிலேயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. வில்லுப்பாட்டைத் தமிழகம் முழுவதும் பரப்பிய பெருமைக்குரியவர்

அ) கலைவாணர் கிருட்டினர் ஆ) சின்னமணி

இ) சிவலிங்க ஆசிரியர் ஈ) பூங்குடி ஆறுமுகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. **அத்தி பூத்தாற்போல** என்பது

அ) அடுக்குத்தொடர் ஆ) இணைமொழித்தொடர்

இ) அடுக்கிடுக்குத் தொடர் ஈ) உவமைத்தொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. கூடினர் என்ற வினைச்சொல்லின் இடைநிலை

அ) ன் ஆ) ஆர் இ) இன் ஈ) ட்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. முழங்கும் கடல்சூழ்ந்த நாவலந்தீவு முழுவதும் தமிழ்நாடாக்கிய மன்னன் யார்?

2. 1972 இல் தரப்படுத்தல் முறை கொண்டுவரப்பட்டதன் கரணியம் என்ன?

3. வில்லுப்பாட்டுக் குழுவில் எத்தனைபேர் இடம்பெறுவர்?

   குழுவின் தலைவரை எவ்வாறு அழைப்பர்?

4. தேவநேயப்பாவாணர் எழுதிய நூல்களின் பெயர்களைத் தருக.

5. சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்ற சட்டம் யாரால் எத்தனையாம் ஆண்டு கொண்டுவரப்பட்டது?

6. குறள் :- ***ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலி னந்நிலையே***
   ***கெட்டா னெனப்படுத னன்று***

   இக்குறளின் பொருளை எழுதுக.

7. உலகில் தோன்றி மறைபவர்களில் மக்கள் மனதில் நிலைத்து நிற்பவர் யார் எனக் கவிஞர் கண்ணதாசன் கூறுகின்றார்?

புள்ளிகள் 10

## 3) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழ்மொழிக்கு அரும்பெரும் தொண்டாற்றியவரும் தமிழ்த்தாத்தா என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்டவருமாகிய அறிஞர்தான் உ.வே.சாமிநாதர். சிறுவயதிலேயே இவருக்கிருந்த தமிழ் ஆர்வத்தைக் கண்டு இவரது தந்தையார் எங்கெல்லாம் தமிழ்ப் பாடம் கற்றுத்தருபவர்கள் இருந்தார்களோ அங்கெல்லாம் சென்று குடியேறித் தன் மகனுக்குத் தமிழ்க்கல்வியைக் கற்பித்தார். உ.வே. சா தமிழ்ப் பண்டிதர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் தமிழ்கற்று பண்டிதர் ஆனார். பழந்தமிழ் ஏடுகள் பழையனவாக இருந்தமையினால் அவற்றைப் புதுப்பிக்கவேண்டும் என்ற எண்ணம் உ.வே. சா மனதில் எழுந்தது. பல இடர்களின் நடுவே ஆங்காங்கே மறைந்து கிடந்த தமிழ்த்தாயின் அணிகலன்களான ஒவ்வொரு நூலையும் தேடிக்கண்டுபிடித்துத் தமிழ்த்தாயை அணிசெய்தார். இவருடைய காலத்திலே பெரும் புலவர்களின் படைப்புகளான அகநானூறு, புறநானூறு, மணிமேகலை போன்றன பெயரளவிலேயே இருந்தன. அழிந்துபோகும் நிலையிலிருந்த பண்டைத்தமிழ் இலக்கியங்களைத் தேடி அவற்றைத் தொகுத்துப் பிழைதிருத்தி அச்சிட்டுப் புதுப்பித்தார். இதன்மூலம் தமிழை அழிவிலிருந்து காத்ததோடு தமிழின் தொன்மையையும் பெருமையையும் உலகறியச் செய்தார். அடுத்த தலைமுறைக்கும் தமிழைக் கொண்டு செல்லும் வாய்ப்பை ஏற்படுத்தினார். தமிழுக்கு இவர் ஆற்றிய தொண்டினைப் பாராட்டி உ.வே.சாமிநாதர் அவர்களுக்கு இந்திய அரசு முனைவர் பட்டம் வழங்கியதுடன் இவருக்கு அஞ்சல்தலையும் வெளியிட்டது.

1. ஊ.வே. சாமிநாதர் யாரிடம் தமிழ் கற்றார்?

___________________________________________

___________________________________________

2. எதன் மூலம் ஊ.வே.சா தமிழரின் தொன்மையையும் செழுமையையும் உலகறியச் செய்தார்?

___________________________________________

___________________________________________

3. தமிழ்த்தாயை எவ்வாறு ஊ.வே.சா அணிசெய்தார்?

4. இங்கு கூறப்பட்ட பெரும்புலவர்களின் படைப்புகள் இரண்டின் பெயர்களைத் தருக.

5. இந்திய அரசு ஊ.வே.சாமிநாதருக்கு என்ன பட்டம் வழங்கியது?

புள்ளிகள் 10

**4) பின்வரும் கவிதைத் தலைப்பில் ஒன்றினைத் தெரிவு செய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

❋ உயரே இருக்கும் கதிரவனே
உன்னால் நன்மைகள் பல வாகும்

❋ இயற்கையின் படைப்புகள் எத்தனை
எண்ணிப் பார்க்கவே விந்தைதான்

❋ கண்ணிமைக்கும் நேரம்கூடத் தாய்மண்ணே
உன்னை நான் மறவேனே தாய்மண்ணே

புள்ளிகள் 10

## 5) இலக்கண - மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வரும் நிறுத்தற் குறிகள் இடம்பெறுமாறு சொல்லியங்கள் எழுதுக.

அ. ஒற்றை மேற்கோட்குறி

______________________________________________

ஆ. இரட்டைமேற்கோட்குறி

______________________________________________

2. எடுத்துக் காட்டுத் தருக.

தனி மொழி :- ______________________

தொடர் மொழி :- ______________________

பொதுமொழி :- ______________________

3. பின்வரும் செய்வினைச் சொல்லியத்தைச் செயப்பாட்டுவினைச் சொல்லியமாகவும் செயப்பாட்டுவினைச் சொல்லியத்தைச் செய்வினைச் சொல்லியமாகவும் மாற்றி எழுதுக.

செய்வினை- பாவேந்தர் புரட்சிப் பாடல்களைப் பாடினார்.

______________________________________________

செயப்பாட்டுவினை - குண்டலகேசி நாதகுத்தனாரால் இயற்றப்பட்டது.

______________________________________________

4. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

அ. உருவக அணி

______________________________________________

ஆ. தற்குறிப்பேற்ற அணி

______________________________________________

5. சொற்பொருள் தருக.

| | | | |
|---|---|---|---|
| செவ்வழி | :- ______________ | ஆடவர் | :- ______________ |
| பரிதி | :- ______________ | வெஞ்சினம் | :- ______________ |
| ஞாலம் | :- ______________ | பொற்கிழி | :- ______________ |

புள்ளிகள் 15

## 6. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

I den gamle tid erobrede en tamilsk konge, Ravanan, Sri Lanka. Ravanan er en stor kriger. Han var en god konge. Han havde dygtighed i musik og dans. Ravanans flag er et flag med « veenai ». Han viste en moders venlighed overfor alle folk. Da han var venlig overfor alle, tilbad alle ham som en Gud. Derfor blev han kaldt « Eesan ». « Eesan » betyder Gud.

In the olden days Thamil king Iravanan ruled Srilanka. He was a big hero. Iravanan was a good king. He was well accomplished in music and dance. Iravanan's flag was a veena flag. Iravanan showed his love to all the people like a mother. Because he was good to everyone they gave him praise as god. So he was called Eesan. The meaning of Eesan is god.

Autrefois, Ravanan, un roi Tamoul a dirigé le Ceylan. C'était un grand guerrier et roi digne de son nom. Il était doué dans la musique et la danse. Son drapeau était un veena, il prenait soin de son peuple comme si c'était sa propre mère. Le peuple le considérait comme un dieu parce qu'il était généreux avec tout le monde et ils l'ont donc nommé « issan » ce qui signifie dieu.

Vor langer Zeit herrschte ein tamilischer König namens Raavanan über Sri Lanka. Raavanan war ein starker Held. Er war ein guter König. Im Gesang und Tanz war er ein talentierter Mann. Die Fahne von Raavanan ist die Veenai-Fahne. Er war zu allen Menschen sehr liebevoll, wie eine Mutter. Da er für alle ein guter Mann war, nannten ihn alle Gott. Deshalb wurde er „Eesan" genannt. „Eesan" bedeutet Gott.

Ravanan is de Tamil keizer die eeuwen geleden Ilangai heeft bestuurd. Ravanan is een grote held. Hij was een goede keizer en was goed in muziek en dansen. De vlag van Ravanan is een Veenai. Hij gaf moederliefde aan het volk. Doordat hij goed was voor iedereen, zagen ze hem als een god. Daardoor werd hij Eesan genoemd. Eesan betekent god.

Ravanan è un re che ha regnato lo Sri Lanka nel passato. Ravanan era un uomo forte e coraggioso. Era considerato un buon regnante. Era un bravo danzatore e musicista. Il simbolo sulla bandiera di Ravanan è un Veenai. Lui dimostrava amore materno verso il suo popolo. Era considerato un regnante dall'animo buono e quindi veniva paragonato a dio. Per questo motivo veniva soprannominato Eesan. Eesan significa dio.

Iravanan var en tamilsk konge som regjerte Ilankai i gamle dager. Iravanan var sterk og var en god konge. Han var veldig flink i musikk og dans. Som symbol på flagget brukte han veena. Han viste kjærlighet til alle borgere. Ettersom alle følte at han var god, hyllet de ham som en gud. Derfor ble han kalt Eesan. Eesan betyr gud.

En kung som regerade över Sri Lanka förr i tiden var Iraavanan. Iraavanan var en stor hjälte. Han var en bra kung. Var duktig inom musik- och danskonsten. Iraavanans flagga är veena-flaggan. Han visade kärlek till alla personer som en mor gör. Eftersom han var god mot allihopa prisade man honom som gud. Därför kallades han för "Eesan". "Eesan" betyder gud.

புள்ளிகள் 05

**7) கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

❋ **மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர்.**

❋ **ஒற்றுமையின் வலிமை.**
மக்களிடையே காணப்படும் ஒற்றுமையின்மை,
இதனால் ஏற்படும் தீமைகள்.

❋ **நீர்** (தண்ணீர்)
நீரின் இன்றியமையாமை.
நீரை விரையமாக்காது பாதுகாக்கும் வழிகள்.

புள்ளிகள் 20